சுருக்கம்

ஆட்சி எல்லை – இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம் மற்றும் கடலாடி வட்டங்களை பிரித்து புதிய கீழக்கரை வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி.1(1)] துறை

அரசாணை (நிலை) எண்.102 நாள்: 04.03.2015.

படிக்கவும்:

1 அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 09.06.2003
2 அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.06.2012.
3 மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம், கடித எண். ந.க. ஜி2/33619/2012, நாள் 23.07.2012.
4 கூடுதல் தலைமைச் செயலர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். பணி6(4) /51175/2012, நாள் 16.07.2014.
5 கூடுதல் தலைமைச் செயலர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். பணி6(3)/51175/2013, நாள் 18.10.2014 மற்றும் 14.11.2014.

---

**ஆணை:–**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.08.14 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

**"இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் மற்றும் கடலாடி ஆகிய வட்டங்களைச் சீரமைத்து புதிய கீழக்கரை வட்டம் உருவாக்கப்படும்."**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தனதறிக்கையில் இராமநாதபுரம் வட்டத்தில் மொத்தம் 7 உள்வட்டங்கள் அடங்கி உள்ளதாகவும், இதில் கீழக்கரை ஒரு உள்வட்டமாக உள்ளதாகவும், இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரை 20 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளதாகவும், கீழக்கரை மூன்றாம் நிலை நகராட்சியாக இயங்கி வருகின்றது எனவும், கீழக்கரை நகராட்சி மக்கள் தொகை அதிகமாகவும் அடர்த்தியாகவும் உள்ள ஒரு கடற்கரை பகுதியாகும் எனவும், கீழக்கரை நகர் வள்ளல் சீதக்காதி பிறந்த ஊராகும் எனவும், வள்ளல் சீதக்காதி பெயரில் அறக்கட்டளை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், கீழக்கரையில் பல கல்வி நிலையங்கள் சிறந்த முறையில் செயல்பட்டு வருவதாகவும், கீழக்கரையில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் வெளிநாட்டவர்களும் பயின்று வருகின்றார்கள் எனவும், கீழக்கரைக்கு மிக அருகாமையில் இஸ்லாமியர்களின் புகழ் பெற்ற ஏர்வாடி தர்ஹா அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். தற்போது இராமநாதபுரம் வட்டத்தில் 7 உள்வட்டங்கள் மொத்தம் 67 வருவாய் கிராமங்கள் அடங்கியுள்ளன என்றும் இவைகளில் 3 உள்வட்டங்களில் உள்ள 24 வருவாய் கிராமங்களை பிரித்தும் கடலாடி வட்டம் சிக்கல் உள்வட்டத்திலிருந்து 2 வருவாய் கிராமங்களை பிரித்தும் ஆக மொத்தம் 26 வருவாய் கிராமங்களைக் கொண்டு தனியாக கீழக்கரையை தலைமையிடமாகக் கொண்டு தனிவட்டம் ஏற்படுத்தலாம் என்றும், புதிதாக அமைய உள்ள கீழக்கரை உள்வட்டத்தில் மொத்தம் 35 பஞ்சாயத்துக்கள் அடங்கியுள்ளன என்றும் கீழக்கரை மூன்றாம் நிலை நகராட்சியும் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியமும் இடம் பெற்றுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். மேலும், புதிதாக அமைய உள்ள கீழக்கரை வட்டத்திற்கு கொண்டு செல்லப்படும் திருஉத்தரகோசமங்கை உள்வட்டத்தில் உள்ள வன்னிவயல், அச்சுந்தன்வயல், லாந்தை மற்றும் சூரியூர் ஆகிய நான்கு வருவாய் கிராமங்களை அவற்றிற்கு மிக அருகில் அமைந்துள்ள இராமநாதபுரம் வட்டத்திலேயே இடம் பெற்றுள்ள இராமநாதபுரம் உள்வட்டத்துடன்

இணைப்பதற்கும் கடலாடி வட்டம், சிக்கல் உள்வட்டத்தில் உள்ள ஏர்வாடி மற்றும் இதம்பாடல் ஆகிய இரு வருவாய் கிராமங்களை கீழக்கரை உள்வட்டத்துடன் இணைப்பதற்கும் ஆட்சேபணை ஏதும் உள்ளதா என்ற அறிவிப்பு சம்பந்தப்பட்ட கிராமங்களில் விளம்பரம் செய்யப்பட்டது என்றும், ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, இராமநாதபுரம் வட்டத்தினைப் பிரித்து புதியதாக கீழக்கரை வட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 9.6.2003—ன்படி மாவட்ட ஆட்சியர் கீழ்க்கண்டவாறு விவரங்களை அனுப்பியுள்ளார்.

| வ. எ ண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ள வட்டம் | | கோரிக்கையின்படி | | | அரசாணை எண்.279, வ.து. நாள் 9.6.2003 —ன்படி குறித்த நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உத்தேச வட்டம் | எஞ்சிய வட்டம் | | |
| | | இராமநாதபுரம் | கடலாடி | கீழக்கரை | இராமநாதபுரம் | கடலாடி | |
| 1 | தலைமையிடம் | இராமநாதபுரம் | கடலாடி | கீழக்கரை | இராமநாதபுரம் | கடலாடி | |
| 2 | பரப்பளவு (சதுர கிமீ) | 754.77 ச.கி.மீ | 613.69 ச.கி.மீ | 309.00 ச.கி.மீ | 478.93 ச.கி.மீ | 590.52 ச.கி.மீ | குறைந்தளவு 250 ச.கி.மீ. முதல் அதிகளவு 2000 ச.கி.மீ. |
| 3 | மக்கள்தொகை | 414877 | 155386 | 140198 | 289945 | 129120 | குறைந்தளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | இராமநாதபுரம் | பரமக்குடி | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | பரமக்குடி | |
| 5 | வருவாய் வட்டத்தின் பெயர் | இராமநாதபுரம் | கடலாடி | கீழக்கரை | இராமநாதபுரம் | கடலாடி | |
| 6 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | இராமநாதபுரம் முதுகுளத்தூர் | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | |
| 8 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | இராமநாதபுரம் | கீழக்கரை | கீழக்கரை | இராமநாதபுரம் | --- | |
| 9 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | இராமநாதபுரம் மண்டபம் திருப்புல்லாணி | கடலாடி | திருப்புல்லாணி கடலாடி | இராமநாதபுரம் மண்டபம் | கடலாடி | இரண்டு அல்லது 3 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் |
| 10 | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | மண்டபம் | சாயல்குடி | --- | மண்டபம் | சாயல்குடி | |
| 11 | உள் வட்டங்களின் எண்ணிக்கை | 7 | 6 | 3 | 4 | 6 | |
| 12 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 67 | 45 | 26 (24 +2) | 43 | 43 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 13 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 86 | 51 | 33 | 53 | 49 | |
| 14 | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் இருக்கும் கிராமங்கள் | மண்டபம் 35 கி.மீ | ஏர்வாடி 34 கி.மீ | ரெகுநாதபுரம் 14.5கி.மீ | மண்டபம் 35 கி.மீ | சிறைக் குளம் 20 கி.மீ | |

த.பி.பா.

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் தனதறிக்கையில் அரசாணை 279, நாள் 9.06.2003–ன்படி உத்தேசிக்கப்பட்டுள்ள வட்டத்தில் குறைந்தது 30 வருவாய் கிராமங்கள் இடம்பெறவேண்டும் என்ற நிலையில், உத்தேசிக்கப்பட்டுள்ள கீழக்கரை வட்டத்தில் 26 வருவாய் கிராமங்கள் மட்டும் இடம்பெற்றுள்ளன என்றும் வறட்சி மிகுந்த கடலோர மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் இரு வருவாய் கிராமங்களுக்கிடையே 5 முதல் 10 கிலோ மீட்டர் தூரம் உள்ளன என்றும் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள கீழக்கரை வட்டத்தை சுற்றி அமைந்துள்ள இராமநாதபுரம் மற்றும் கடலாடி வட்டங்களிலிருந்து வேறு ஏதேனும் கிராமங்களை கீழக்கரை வட்டத்துடன் இணைத்தால் அவை தற்போது அமைந்துள்ள தலைமை இடத்திலிருந்து தொலைவில் அமையும் வண்ணம் உள்ளன என்றும் இதனால் பொதுமக்கள் வட்டத் தலைமையிடத்திற்குச் செல்வதற்கு தற்போது உள்ளதைவிட அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும் என்றும் இதனால் மேலும் வருவாய் கிராமங்களை கீழக்கரை வட்டத்துடன் இணைக்க இயலாத நிலையே உள்ளது என்றும் தெரிவித்து, இதனை சிறப்பு நேர்வாக கொண்டு இந்த நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு அளித்து புதிய வட்டம் அமைக்க பரிந்துரை செய்துள்ளார்.

4. மேலும் 13.06.2014 அன்று நடைபெற்ற உயர்மட்டக் குழுவின் ஆய்வு கூட்டத்தில் இம்முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது என்றும் இலங்கை அகதிகள் தொடர்பான பிரச்சனைகள், மீனவர்கள் பிரச்சனை மற்றும் மேற்கண்ட வட்டம் கடலோரத்தைச் சார்ந்தது என்பதால் மழை, கடல் சீற்றம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளை அடிக்கடி சமாளிக்கும் நிலை ஏற்படுவதாலும் கீழக்கரை புதிய வட்டம் அமைப்பது குறித்த கோரிக்கையினை சிறப்பு நேர்வாகக் கொண்டு அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 30 கிராமங்கள் என்ற அளவுகோலை பூர்த்தி செய்யாவிடினும் 26 வருவாய் கிராமங்களைக் கொண்டு புதிய கீழக்கரை வட்டம் அமைக்க, உயர்மட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது என்றும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

I) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் கடலாடி வட்டங்களை பிரித்து புதிய கீழக்கரை வட்டம் உருவாக்கப்படுகிறது.

II) புதியதாக உருவாக்கப்படும் கீழக்கரை வட்டத்திற்கு கீழ்கண்டவாறு மொத்தம் 43 பணியிடங்களும், இதில் 24 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும், 19 பணியிடங்கள் புதியதாக உருவாக்கவும் ஒப்புதல் வழங்கப்படுகிறது:–

பொதுப் பிரிவு

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் / தற்காலிகம் | மொத்த பணியிடங்கள் | | நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | | மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பபட வேண்டிய பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இராம நாதபுரம் | கடலாடி | இராம நாதபுரம் | கடலாடி | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 3. | மண்டல துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 2 | 1 | 2 | -- | 1 | 1 |
| 4. | உதவியாளர்<br>* 7 மிகைப்பணியிடங்கள் | நிரந்தரம் | 9 | 5 | 2 | 3 | 2 | -- | 2 |
| 5. | வருவாய் ஆய்வாளர் | நிரந்தரம் | 7 | 6 | 4 | 6 | 3 | -- | 3 |
| 6. | இளநிலை உதவியாளர்<br># 6 மிகைப்பணியிடங்கள் | நிரந்தரம் | 7 | 5 | 2 | 3 | 1 | -- | 1 |
| 7. | தட்டச்சர்<br>## 2 மிகைப்பணியிடங்கள் | நிரந்தரம் | 3 | 2 | 1 | 1 | 1 | -- | 1 |
| 8. | பதிவுறு எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 9. | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 10 | 9 | 6 | 8 | 5 | -- | 5 |
| 10. | இரவுக் காவலர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 11. | மசால்சி | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 12. | ஈப்பு ஓட்டுனர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| | | **மொத்தம்** | **43** | **35** | **22** | **29** | **12** | **7** | **19** |

** 7 உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடங்களாக உள்ளன. இதில் தேர்தல் பிரிவு, சிறப்பு திட்ட அமலாக்கம், வட்ட வழங்கல் பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 4 உதவியாளர் மிகைப்பணியிடங்கள் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

*# 6 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடங்களாக உள்ளன. இதில் கீழக்கரை வட்டத்தில், சமூகப் பாதுகாப்புத் திட்டம், வட்ட வழங்கல் ஆகிய பிரிவுகளுக்கு தலா 1 பணியிடமும், கடலாடி வட்டத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் பிரிவிற்கு 1 பணியிடமும் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 3 இளநிலை உதவியாளர் மிகைப்பணியிடங்கள் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

*## 2 தட்டச்சர் பணியிடங்கள் மிகைப்பணியிடங்களாக உள்ளன. இதில் கீழக்கரை வட்டத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் பிரிவிற்கு 1 பணியிடமும், கடலாடி வட்டத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் பிரிவிற்கு 1 பணியிடமும் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

த.பி.பா.

சமூகபாதுகாப்புத் திட்டம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தனிவட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | தற்காலிகம் | 2 | 1 | 1 | 1 | 1 | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 1 | -- | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4 | தட்டச்சர் | நிரந்தரம் | -- | -- | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 5 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | -- | -- | -- | -- | -- | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 |
| | மொத்தம் | | 6 | 2 | 5 | 4 | 3 | 4 | 7 |

தேர்தல் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | | 2 | 2 | 2 | 2 | 1 | 1 | 2 |

சிறப்புத் திட்ட அமலாக்கம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | கணினி இயக்குபவர் (தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.7500/--வீதம்) | தற்காலிகம் | 1 | -- | 1 | -- | *1 (மரக்காணம் வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | | 3 | 2 | 3 | 2 | 2 | 1 | 3 |

* புதியதாக உருவாக்கப்படும் மரக்காணம் வட்டத்தில் 1 கணினி இயக்குபவர் பணியிடம் மிகைப் பணியிடமாக உள்ளது. இப்பணியிடம் மறுபரவலமர்த்தல் மூலம் புதிய கீழக்கரை வட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

வட்ட வழங்கல் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்) | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4 | தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | நிரந்தரம் | 2 | 1 | 1 | 1 | 1 | -- | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | -- | -- | -- | -- | -- | 1 | 1 |
| | | மொத்தம் | 5 | 4 | 4 | 4 | 3 | 2 | 5 |

நில அளவை பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட துணை ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 4 | வட்ட வரைவாளர் (#2 மிகைப் பணியிடங்கள்) | நிரந்தரம் | 1 | 1 | -- | -- | -- | -- | -- |
| 5 | புல உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 6 | நத்தம் சார் ஆய்வாளர் (## 1 மிகைப் பணியிடம்) | நிரந்தரம் | 1 | -- | -- | -- | -- | -- | -- |
| 7 | குறுவட்ட அளவர் | நிரந்தரம் | 7 | 6 | 4 | 6 | 3 | -- | 3 |
| | | மொத்தம் | 13 | 11 | 8 | 10 | 3 | 4 | 7 |

# 2 வட்ட வரைவாளர் பணியிடங்கள் மிகைப் பணியிடங்களாக உள்ளன. இந்த மிகைப்பணியிடங்கள் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

## 1 நத்தம் சார் ஆய்வாளர் பணியிடம் மிகைப் பணியிடமாக உள்ளது. இந்த ஒரு மிகைப்பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

கீழக்கரை வட்டத்திற்கான மொத்த பணியிடங்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 43 | 35 | 22 | 29 | 12 | 7 | 19 |
| 2 | சமூகப் பாதுகாப்பு திட்டம் | 6 | 2 | 5 | 4 | 3 | 4 | 7 |
| 3 | தேர்தல் பிரிவு | 2 | 2 | 2 | 2 | 1 | 1 | 2 |
| 4 | சிறப்பு திட்ட அமலாக்கம் | 3 | 2 | 3 | 2 | 2 | 1 | 3 |
| 5 | வட்ட வழங்கல் பிரிவு | 5 | 4 | 4 | 4 | 3 | 2 | 5 |
| 6 | நில அளவை பிரிவு | 13 | 11 | 8 | 10 | 3 | 4 | 7 |
| | மொத்தம் | **72** | **56** | **44** | **51** | **24** | **19** | **43** |

III) புதியதாக உருவாக்கப்படும் கீழக்கரை வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் செலவினம் மற்றும் தொடராச் செலவினம் கீழ்கண்டவாறு ஒப்பளிக்கப்படுகிறது:-

அ) தொடரும் செலவினம்

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள்(ஆண்டொன்றுக்கு) | 43,08,600 |
| 2 | தாலுக்கா (அலுவலக கட்டிட வாடகை) | 1,44,000 |
| 3 | எரிபொருள் (டீசல்) | 1,92,000 |
| 4 | மின்சார கட்டணம் | 1,20,000 |
| 5 | தொலைபேசிக்கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | **47,90,100** |

(ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நூறு மட்டும்)

ஆ) தொடரா செலவினங்கள்

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | அலுவலகக் கட்டடம் | --- |
| 2) | வட்டாட்சியர் குடியிருப்பு | --- |
| 3) | ஈப்பு | 11,12,000 |
| 4) | கணினி | 75,000 |
| 5) | பிரிண்டர் | 25,000 |
| 6) | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 65,000 |
| 7) | பேக்ஸ் | 10,000 |
| 8) | தளவாடங்கள் | 4,00,000 |
| 9) | தீயணைப்பான் | 10,000 |
| 10) | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 11) | குளிர்சாதனப்பெட்டி | 25,000 |
| | மொத்தம் | 17,28,000 |

(ரூபாய் பதினேழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்)

IV) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பிற்கான செலவினம் தோராய மதிப்பீடு பொதுப்பணித் துறையினரிடமிருந்து பெறப்பட்டு அக்கருத்துத்துரு தனியே ஆய்வு செய்யப்படலாம்.

V) தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணிக்காலம் ஒரு ஆண்டு முடிவதற்கு முன்பாக பணி இடைவெளி (Break in service) கொடுக்கப்படவேண்டும்.

6. மேலே பத்தி 5(iii)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(I) பணியாளர் சம்பளங்கள்

(i) வருவாய் பணியிடங்கள் ரூ.1,000/–
"2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I. திட்டத்தில் சேராதது –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்"
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ.1,000/–
2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I. திட்டத்தில் சேராதது – AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ.1,000/–
3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I. திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – I. திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 05 அலுவலகச் செலவுகள்–01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.32,000/–
தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/– தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) 05 05 அறைகலன்கள் ரூ.4,00,000/– 05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் – 01 வாடகை ரூ.1,44,000/–
தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் ரூ.1,10,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.11,12,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–
தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,00,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

த.பி.பா.

7. மேலே பத்தி 5(iii)–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Services). இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்திற்கு தேவைப்படும் நிதி முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து நடப்பு ஆண்டிற்கு தேவைப்படும் நிதியை முன்பணமாக பெறுவதற்கு உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2014–2015 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதித் (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 04.03.2015–ஆம் நாள் முதல் செயல்படும்.

9. புதிய கீழக்கரை வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 5–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.13402/மை.ம.ஆ.பி./15, நாள் 03.03.2015–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2669 (இரண்டாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்பது).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 79.
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலாளர்//நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம்.
மாவட்ட கருவூல அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம்.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.

பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை – 104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை – 9.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை – 15.

**நகல்:**
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதித்( வ.செ.பொது – II/வருவாய்/கக – 3/கூ.உ(ம)நுபா/பொதுப்பணி-I/மை.ப.ஆபி)துறை, சென்னை – 9.
இகோ/உதிரி – 2.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர் 5.3.15.
5/3/15

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.102, வருவாய்த்துறை, நாள் 04.03.2015**

### அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் மற்றும் கடலாடி வட்டங்களை பிரித்து 2015 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 4–ஆம் நாளிலிருந்து கீழக்கரை தலைமையிடமாக கொண்டு புதிதாக வட்டம் ஒன்று கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. தற்போது இராமநாதபுரம் வட்டம், திருஉத்திரகோசமங்கை குறுவட்டத்திலுள்ள 21.வன்னிவயல், 22.அச்சுந்தன்வயல், 23.லாந்தை மற்றும் 24.கூரியூர் ஆகிய வருவாய் கிராமங்கள் பிரிவினைக்குப்பின் இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் உள் வட்டத்தில் இணைக்கப்படும்.

3. தற்போது கடலாடி வட்டம், சிக்கல் உள்வட்டத்திலுள்ள 44.இதம்பாடல், 45.ஏர்வாடி ஆகிய வருவாய் கிராமங்கள் பிரிவினைக்குப் பின் கீழக்கரை வட்டம், கீழக்கரை உள்வட்டத்தில் இணைக்கப்படும்.

4. புதிய கீழக்கரை உள்வட்டத்தில் உள்ளடங்கும் 1.கீழக்கரை, 2.திருப்புல்லாணி, 3.உத்திரகோசமங்கை ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது இராமநாதபுரம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி கீழக்கரை வட்டாட்சியரால் 2015 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 4–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

| வ.எண். | குறுவட்டத்தின் பெயர் | கிராம எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | 032 | பனையடியேந்தல் |
| | | 033 | வேளானூர் |
| | | 034 | மாணிக்கனேரி |
| | | 035 | புல்லந்தை |
| | | 036 | மாயாகுளம் |
| | | 037 | கீழக்கரை |
| | | 038 | காஞ்சிரங்குடி |
| | | 041 | குளபதம் |
| | | 044 | இதம்பாடல் |
| | | 045 | ஏர்வாடி |

த.பி.பா.

| | | | |
|---|---|---|---|
| 2 | திருப்புல்லாணி | 039 | திருப்புல்லாணி |
| | | 040 | பள்ளமோர்குளம் |
| | | 042 | களரி |
| | | 043 | வெள்ளமரிச்சுக்கட்டி |
| | | 047 | குதக்கோட்டை |
| | | 048 | களிமண்குண்டு |
| | | 049 | வண்ணான்குண்டு |
| | | 050 | பெரியபட்டினம் |
| | | 051 | ரெகுநாதபுரம் |
| 3. | திருஉத்திரகோசமங்கை | 025 | எக்கக்குடி |
| | | 026 | பனைகுளம் |
| | | 027 | மாலங்குடி |
| | | 028 | மல்லல் |
| | | 029 | ஆலங்குளம் |
| | | 030 | திருஉத்திரகோசமங்கை |
| | | 031 | நல்லிருக்கை |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

5.3.15.
பிரிவு அலுவலர்
5/3/15